# ORIGION AND DEVELOPMENT OF GRAFITTIMARK OF ANCIENT PEOPL OF PORATIVUPPATTU DIVISION OF BATTICALOA

LIBRARY
22 JUN 2018
EASTERN UNIVERSITY, SRI LANKA.

BY:

NAME: KALIKKUDDY INTHUCHJA

REGISTRATION NUMBER: EU/IS/2011/AC/97

INDEX NUMBER: CS4397

DESSERTATION IS SUBMITTED FOR THE PARTICAL FULFILLMENT OF THE REQUIREMENT FOR THE DEGREE OF BATCHELOR OF ARTS (SPECIAL) IN HISTORY IN THE DEGREE OF BATCHELOR OF ARTS & CULTURE, EASTERN UNIVERSITY, SRILANKA.

FAC499
Project Report
Library - EUSL

DEPARTMENT OF HISTORY

FACULTY OF ARTS AND CULTURE

EASTRN UNIVERSITY

SRILANKA

2018

PROCESSED
Main Library, EUSL

## முன்னுரை

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தில் வரலாற்றுத்துறையின் சிறப்புக்கற்கையை பூர்த்தி செய்யும் முகமாக, இவ்வாய்வை மேற்கொண்டுள்ளேன். அவ்வகையில் போரதீவுப்பற்று பிரதேசத்தை ஆய்வு மையமாகக் கொண்டு, "போரதீவுப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட மக்களின் புராதானகால பாவனைக் குறியீடுகளின் தோற்றமும் வளர்ச்சியும் ஒரு களஆய்வு" எனும் தலைப்பினூடாக இவ்வாய்வு முன்னெடுத்துச்செல்லப்படுகிறது. இதனூடாக இம்மக்கள் அன்றாட வாழ்வில் பயன்படுத்துகின்ற குறியீடுகளை இனம் காண்பதாகவும், வகைக்குறிப்பதாகவும், இப்பிரதேசவாழ் மக்களின் புராதன கால வாழ்க்கை வரலாற்றை மீழ்நிர்மானம் செய்யக்கூடியதாகவும் அத்தோடு பெருங்கற்காலத்தில் பயன்படுத்தப்பட்ட பாவனைக் குறியீடுகளை அடையாளப்படுத்துவதாகவும் இவ்வாய்வு அமைகின்றது.

தொல்லியல் பொருட்கள் அல்லது எச்சங்கள் தொடாபர்க ஆராய்வதற்கும் அது தொடர்பாக அறிவதற்கும் முற்படுகின்றபோது முதலில் அதனை வரையறை செய்து கொள்வது பொருத்தமானது. ஆயினும் சில சமயங்களில் ஆய்வு முயற்சியனுடைய பரப்பானது பரந்து பட்டதாகவும் காணப்படும். இவ்வாய்வானது குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தை மையப்படுத்தி பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு ஆவணப்படுத்தும் ஒரு முயற்சியாக அமைகின்றது. இது வரை காலமும் ஆய்வுகளை மேற்கொண்டிருந்த தொல்லியல் வரலாற்று அறிஞர்களான பாக்கர்(Parkar 1909),கொட்றிங்ரன் (Codtrinton 1924), பேராசிரியர் பரணவிதான(Paranavithana1970,1924) பேராசிரியர் பத்மநாதன், பேராசிரியர் புஸ்பரட்னம், செல்வி தங்கேஸ்வரி, வெல்லவூர் கோபால் போன்ற வரலாற்று ஆய்வாளர்களது முயற்சிகள் எமது இத்தகைய ஆய்விற்கு முன்னோடியாக அமைகின்றது. அதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் தெற்கெல்லையிலுள்ள போரதீவப்பற்றிலுள்ள தொல்லியல் சின்னங்களில் காணப்படுகின்ற பாவனைக் குறியீடுகளினை அடையாளப்படுத்தியுள்ளேன். இது பிற்கால ஆய்வுகளுக்கு உதவியாக அமைவதோடு ஊக்குவிப்பாகவும் இருக்கும் என நம்புகிறேன்.

அவ்வகையில் தொல்லியல் ஆய்வு என்றால் என்ன? அவற்றில் உள்ளடங்கும் பிரிவுகள் அவற்றின் மூலம் அறியப்படும் வரலாற்று செய்திகளின் ஊடாக எம்பிராந்தியத்திலுள்ள ரொல்பொருள் ஆய்வுகளில் காணப்படும் குறியீடுகள், அக்குறியீடுகள் உணர்த்தும் விளக்கம், அக்குறியீடுகள் தற்போது கையாளப்படும் விதம் என்பவற்றை அறிந்து கொள்வதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதாக இவ்வாய்வு அமைகின்றது.

எனது இவ்வாய்வானது கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்றுபிரதேச செயலகப்பிரிவினை அடிப்படையாகக் கொண்டது. இப்பிரதேத்தினைப் பொறுத்த வரையிலே இதுவரைகாலமும் இத்தலைப்பு

சார்ந்ததாகவோ அல்லது இவ்விடயம்தொடர்பான வேறு ஆய்வுகளோ இங்கு நடாத்தப்படவில்லை. அதுமாத்திரமின்றி போரதீவுப்பற்று பிரதேச சபை தொடர்பான வரலாற்று ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பாக நோக்குகின்ற போது மந்த நிலையே காணப்படுகின்றது. எனவே இதனை நிவர்த்தி செய்யுமுகமாக இவ்வாய்வு நடை பெறுகின்றது.அத்துடன் இங்கு இதுவரை ஆய்வு செய்யப்பட்ட பிரதேசங்களாக வெல்லாவெளி, கோவில்போரதீவு, தும்பங்கேணி, பழுகாமம், மண்டூர், களுமுந்தன்வெளி, விநாயகபுரம் போன்ற பகுதிகளே காணப்படுகின்றன. மேலும் இவ்வாய்வானதும் இப்பகுதிகளையே அநேகமாக உள்ளடக்கியிருப்பதோடு ஏனைய பகுதிகளும் உள்ளட்க்கப்படுகின்றன.

மட்டக்களப்பு பிரதேசத்தின் வரலாறு பற்றி மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்பு பூர்வீக வரலாறு,மட்டக்களப்பு தமிழகம், மட்டக்களப்பு வரலாறு ஒரு பார்வை, கிழக்கிலங்கை வரலாற்று இலக்கியங்கள், கலிங்க மாகோன் வரலாறு, எஸ்.ஏ.கனகரெத்தினத்தின் குறிப்புகள் முதலானவை குறிப்பீடுகின்றன.

மட்டக்களப்பு தென்பகுதி பிரதேசம் பற்றி குறிப்பிடுகின்ற வரலாற்று நூல்கள் சொற்பளவிலே காணப்படுகின்றன. அவ்வகையில் தங்கேஸ்வரியால் எழுதப்பட்ட கிழக்கிலங்கை வழிபாட்டுப் பாரம்பரியங்கள், வெல்லவூர்க் கோபாலின் வெல்லாவெளி வரலாறு, பழுகாம வரலாறு, பேராசிரியர் பத்ம நாதனின் இலங்கை தமிழ்ச்சாசனங்கள் பாகம் ஒன்று, போரதீவுப்பற்று பிரதேச சபைகளினால் வெளியிடப்படும் சஞ்சிகைகள் மற்றும் காலத்திற்கு காலம் வெளியிடப்படும் கட்டுரைத்தொகுப்புக்கள் போன்றவற்றையே குறிப்பிடலாம்.

போரதீவுப்பற்று பிரதேசத்தினைப் பொறுத்த வரையில் இது வரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் இங்கு தொன்மை மிக்க இலக்கிய மூலாதாரங்களோ, செப்பேடுகளோ கிடைக்கவில்லை. எனினும் பழமை மிக்க தொல்லியல் மூலாதாரங்கள் கிடைக்கப்பட்டுள்ளமை இப்பிரதேசத்தின் பூர்வீகத்தையும் மற்றும் வரலாற்றுத் தொன்மையையும் எடுத்துக் காட்டுகின்றது. மேலும் இங்கு பூர்வீகக் குடிகள் வாழ்ந்துள்ளமைக்கான ஆதாரங்கள் அதாவது கல்வெட்டுக்கள், தொல்லியல் பொருட்க்கள் கிடைக்கப்பெறுவதும் இப்பிரதேசத்தின் புராதன செல்வாக்கையே எடுத்துக் காட்டுகின்றது. அவ்வகையில் இங்கு கிடைக்கப்பட்ட கல்வெட்டுக்கள், ஆலயச் சிதைவுகள் மற்றும் பண்பாட்டுக் கோலங்களின் மூலமாகவும் குறியீடுகளின் செல்வாக்கினை அறிய முடிகின்றது.

இவ்வாய்வினைப் பொறுத்த வரையில் ஆய்வுப் பிரதேசமான போரதீவப்பற்றின் முக்கியத்துவமுள்ள வரலாற்றுத் தொன்மை மிக்க இடங்களை மையப்படுத்தியதாகவும் பெரும்பான்மையாக அங்கிருந்து கிடைக்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டதாகவுமே இவ்வாய்வு நகர்த்தப்பட்டு கட்டமைக்கப்படுகின்றது. இவ்வகையில்

இப்பிரதேசத்தினைப் பொறுத்த வரையிலே பல இடங்கள் புராதன வரலாற்றுப் பாரம்பரியங்கள் கொண்டதாக விளங்குகின்றன. அயினும் அவ்விடங்கள் இதுவரை ஆய்வு செய்யப்படவில்லை. இவ்வகையில் எதிர்கால சந்ததியினரின் இது போன்ற ஏனைய ஆய்வுக்கு வழிகாட்டியாக அமையும் வகையில் அத்தகைய இடங்கள் ஆய்வு செய்யப்படுவது அவசியமாகும்.

இவ்வாய்வினை அடிப்படையாகக் கொண்டு தொல்பொருட்ச்சின்னங்கள், பிராமிச்சாசனங்கள், ஆலயங்கள், சலவைத்தொழிலாளர்கள்,மட்பாண்டங்கள், வெண்கலப்பாத்திரங்கள்மற்றும் கால் நடைகள் போன்ற பல்வேறுபட்ட அம்சங்களினூடாக இப்பிரதேசத்திலே ஆரம்ப காலங்களில் பயன்படுத்தப்பட்ட அதாவது பெருங்கற்காலத்தில் பயன்படுத்தப்பட்ட குறியீடுகளும் அவை வெளிப்படுத்தும் வரலாற்று முக்கியத்துவத்தையும் எவ்வாறு தோற்றமடைந்து வளர்ச்சி பெற்று தற்காலத்திலும் புழக்கத்திலுள்ளமையை அறிய முடிகின்றது.

ஆய்வாளர்

# பொருளடக்கம்


**விடயம்** **பக்கம்**

முன்னுரை........................................................................................i -iii

நன்றியுரை........................................................................................iii - iv

பொருளடக்கம்...................................................................................vi - viii

**அத்தியாயம் 01** ஆய்வு அறிமுகம்...........................................................01-06

**அத்தியாயம் 02** பிரதேச அறிமுகம்..........................................................07 - 28

**அத்தியாயம் 03** குறியீடுகள்...................................................................29 - 47

**அத்தியாயம் 04** இலங்கையில் குறியீடுகளின் தோற்றம் வளர்ச்சி..........48 - 65

**அத்தியாயம் 05** ஆய்வுப் பிரதேசத்தில் குறியீடுகள்...................................66 – 92

முன்னுரை........................................................................................86-88

உசாத்துணை....................................................................................89-91

பின்னிணைப்பு...................................................................................92-101